

# இலக்கிய வானில் இலங்கிடும் தாரகை

காத்தான்குடி நவ இலக்கிய மன்ற பொன் விழாப் புகழாரம்

கவிமணி
மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு
நவ இலக்கிய மன்றம் - காத்தான்குடி

# இலக்கிய வானில் இலங்கிடும் தாரகை

காத்தான்குடி நவ இலக்கிய மன்ற பொன் விழாப் புகழாரம்

கவிமணி
மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய வானில் இலங்கும் தாரகை

காத்தான்குடி நவ இலக்கிய மன்ற பொன் விழாப் புகழாரம்

கவிமணி மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹி)

முதற் பதிப்பு: நவம்பர் 2010 ★ வெளியீடு: நவ இலக்கிய மன்றம், காத்தான்குடி ★ பதிப்புரிமை: ஆசிரியருக்கே ★ தளக்கோளம்: டிரீம் மீடியா புரோ +94714304204, +94777238204 ★ அட்டை வடிவமைப்பு: முஹம்மத் பைறூஸ் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

காத்தான்குடி நவ இலக்கிய மன்றத்தின் பொன் விழாவையொட்டி இந் நூல் மலர்கிறது. இம்மன்றத்தின் வரலாற்றுப் பதிவாக இந் நூலைக் கருதலாம். இலக்கிய மன்றம் எனும் வண்டியில் ஏறிப் பயணித்தவர்கள், அப் பயணத்தில் சாதனை படைத்தவர்கள் யார் யார் என்பதை இந்நூல் பேசுகிறது. இம் மன்றத்தால் தூக்கிவிடப்பட்டவர்கள், அதன் மூலம் இலக்கிய வானில் பிரகாசிப்பவர்களையெல்லாம் இதில் சந்திக்க முடியும்.

அத்துடன் காத்தான்குடியென்னும் இலக்கியப் பூங்காவின் வனப்பையும் வளத்தையும் இதில் கண்டு மகிழலாம். இன்று இதுவொரு சிறு நூலாகத் தென்படலாம். எதிர்காலத்தில் காத்தான்குடியின் இலக்கிய வரலாறு ஆய்வு செய்யப்படும்போது, இது கனதியான பங்களிப்பைச் செய்யக் கூடும்.

ஆரம்ப முதலே நவ இலக்கிய மன்றத்துடன் இணைந்து அதன் மூலம் வளர்ந்தவன் யான். இந் நூல் அதற்கு நான் செய்யும் நன்றிக் கடனாக அமையும் எனக் கருதுகிறேன்.

- மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இலங்கிடும் எங்கள் காத்தான் குடியில்
இலங்கிடும் மன்றம் இலக்கிய மன்றம்
துலங்கிடும் அதனைத் துவங்கிய வர்கள்
விளங்கிடும் தமிழில் விளங்கியோ ராவர்

2. பாவலர் தாவூத் ஸாவெனும் அறிஞர்
பாவலர் சாந்தி முகிதீனும் ஆவார்
நாவலர் மஹ்றூப் கரீமெனும் அதிபர்
ஆர்வலர் ஸபாஜீ இஸ்மாயீல் ஆவார்

3. பொருள்வளக் குடும்பப் புத்திர ரான
திருவளர் அமீனுல் லாவெனும் நண்பர்
பொறுப்புடன் அன்னார் புரிந்தநற் பணியால்
சிறப்புடன் மன்றம் செழித்ததே நாளும்

4. தொடங்கியோர் தம்மின் தொடரான பணியால்
நடந்திடும் மன்ற உறுப்பின ராக
இடம்பிடித் தார்கள் இலக்கியச் செல்வர்
தொடர்ந்தன மன்றத் தூய நற் பணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உதுமா லெப்பை உறுப்பின ரானார்
புதுமைசெய் கலைஞர் முஸ்தபா மாஸ்டர்
இதந்தரு பண்பர் ஸாலிமாஸ் டருடன்
மதக்கலை கற்ற மௌலவி புஹாரி

6. பதவியில் உயர்ந்த இஸ்மாயீல் பீ.ஏ.
அதிபரா யிருந்த அப்துல் லத்தீப்
இதந்தரு நண்பர் எச்.எம். இக்பால்
மதிப்புறு மௌலவி அப்துல் காதர்

7. முத்தமிழ் கற்ற முகிதீன் பிச்சை
நற்றமிழ்ப் பாடகர் பாறூக் மாஸ்டர்
சித்தங் கவர்கவி நவநூர் தம்முடன்
கற்றவர் டாக்டர் நஜ்முத் தீனும்

8. இலக்கியத் துறையில் விளங்கிடு கின்ற
இலக்கிய வாணர் பற்பலர் நமது
இலக்கிய மன்ற உறுப்பின ரானார்
இலக்கிய வானிற் துலங்கிட லானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கவிச்சுடர் ஜஃபர் கானும் ஒருவர்
கவிஞர் ஜுனைதீன் கவிஞர் யூனூஸ்
கவிபொழி சிறாஜ்தீன் சித்தீக் மாஸ்டர்
கவின் கலை பௌசு மௌலவி யாவார்

10. மதியன் பன்மஜீத் மனாபெனும் மாஸ்டர்
இதமார் ஸஜீயெனும் இளையவர் போன்று
மதிப்புடன் இன்னும் பற்பலர் எமது
மதிப்புறு இலக்கிய மன்றம் சேர்ந்தனர்

11. இளங்கோ அமீரலி இணைந்தார் எம்முடன்
வளமார் கவிதரு ஜிஹாரும் சேர்ந்தார்
விளங்கும் இவர்கள் வியக்கும் விதமாய்
நலமாய் எழுதிடும் நல்ல கவிஞராம்

12. இக்பால் கானுடன் இளைஞர் சுபைர்கான்
மிக்கத் திறனுறு மேலும் பற்பலர்
தக்க முறையிலே சேர்ந்தார் எம்முடன்
மிக்க சிறப்புடன் மன்றம் மிளிர்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இலக்கிய மன்ற வண்டியில் ஏறி
இலக்கியப் பவனி வந்தனர் அன்னார்
துலக்கினர் தமது இலக்கியத் திறனை
வளர்ந்தது மன்றம் வளமெலாம் பெற்று

14. வாரத் தொரு நாள் சனித் தினத்தன்று
சீராய் நடக்கும் மன்றக் கூட்டம்
ஆர்வத் துடனே அனைவருங் கூடி
சீருடன் நிகழ்ச்சிகள் சிறப்பாய்த் தருவார்

15. நாவல் லோர்கள் நல்லுரை தருவார்
பாவல் லோர்கள் பாக்கள் படிப்பார்
ஆவல் மிகைத்தே நாடகம் நடிப்பார்
நாவால் கீதம் நயந்தே இசைப்பார்

16. ஆண்டுக் கொருமுறை விழாக்கள் நடக்கும்
தூண்டும் உணர்வைக் கவிதை நிகழ்வு
சான்றோர் பல்லோர் சாற்றுவர் உரைகள்
ஆண்டு விழாக்களால் ஊரே களிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. பேச்சு கட்டுரை கவிதைப் போட்டிகள்
வீச்சாய் நடக்கும் விவாதம் நிகழும்
ஆச்சரி யத்துடன் அனைவருங் கேட்பவர்
மாட்சிமை கண்டு மனங்களிப் பார்கள்

18. வில்லுப் பாட்டு வியத்தகு வண்ணம்
எல்லார் மனத்தையும் ஈர்த்துக் கொள்ளும்
வில்லுப் பாட்டு விளக்கும் செய்திகள்
உள்ளந் தன்னில் உணர்ச்சியைக் கூட்டும்

19. பட்டிமன் றங்கள் பற்பல தலைப்பில்
இட்டமாய் நடத்தும் இலக்கிய மன்றம்
வட்டமாய் அமர்ந்து வார்த்தைச் சூரர்
பட்டிமன் றத்தைப் பாங்காய் நடத்துவர்.

20. புத்தகம் புனைந்த வித்தகர் தம்மைச்
சித்தங் களித்துச் சிறப்பாய்ப் போற்றி
புத்தகம் பற்பல வெளியிட் டேற்றி
நித்தமும் பணிகள் நிகழ்த்திய மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. தமிழர் முஸ்லிம் பாகுபா டின்றி
தமிழிற் தேர்ந்த தகையோர் தம்மின்
தமிழ்ப் பணிக்காகத் தகுதியாய்ப் போற்றித்
தமிழ்ப் பணி செய்த தனியொரு மன்றம்

22. வளமார் அப்துல் காதர் லெப்பை
குழந்தைக் கவிஞர் நாகூர் ஏ பாவா
மழலையர் மாமா மாஸ்டர் சிவலிங்கம்
பழந்தமிழ் மேதை டாக்டர் அபூபக்கர்

23. வித்துவான் கமல நாதனார் ஐயா
வித்தகர் மருத மைந்தனாம் ஹமீது
சத்துள உரைதரு தாவூத் ஸாஹிப்
பித்தனாம் ஷாவைப் போற்றிய மன்றம்

24. காத்தான் குடியிற் கம்பீர மாகப்
பார்த்தோர் தம்மைப் பரவசப் படுத்தும்
காத்திர மான கலாசார மண்டபம்
பூத்திடக் காரண மாகிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. இலக்கிய வானிற் துலங்கிடும் பல்லோர்
இலக்கிய மன்றக் களத்தில் விளைந்தவர்
இலங்கைத் தேசம் எங்கணும் அன்னார்
இலங்கிடு கின்றார் விளங்கிடு கின்றார்

26. விருதுகள் பற்பல வென்றவ ருள்ளார்
பெறுமதி மிக்க பரிசுகள் பெற்றார்
பரிசுடன் பட்டமும் தட்டியே கொண்டார்
அரசினர் விருதுகள் அணிந்தவ ருள்ளார்

27. தேசிய விருதாம் சாகித்திய விருதை
நேசமாய்ப் பெற்றவர் ஜஃபர் கானும்
வீசிடும் புகழுறு விருதாம் உயர்கலா
பூஷண விருதினைப் பூண்டவ ருள்ளார்

28. கவிமணி புஹாரியும் கவிதருஞ் சாந்தியும்
கவின்மிகு கலைஞராம் முஸ்தபா மாஸ்டரும்
புவி புகழ் நாவலர் மஹ்றூப் கரீமும்
நவிலுதற் கரிய அவ் விருதை வென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. ஆளுனர் விருதையும் முதல்வர் விருதையும்
மேலாய்ப் பெற்றவர் சாந்தி முகியித்தீன்
காலம் முந்திய நூல்கள் பேணியே
சாலச் சிறப்புடன் தமிழை வளர்த்தவர்

30. சிறுகதை நாடகம் நாவல்கள் எழுதும்
பெரும்புக ழாளர் ஜுனைதா ஷரீபு
பிறந்தகம் காத்தான் குடியதா மன்றோ?
சிறப்புடன் பெற்றார் கலாபூ ஷணத்தை

31. தேன் தமிழ் மொழியில் தித்திக்கும் கவிதை
மாண்புடன் யாக்கும் மௌலவி சுபைரும்
மேன்மைசார் விருதுறு கலாபூ ஷணம் அவர்
மாண்பாய் மதித்திடும் இலக்கிய மன்றம்

32. பெண்ணெழுத் தாளர் பெருமைசேர் பாத்திமா
கண்ணிய மான கலாபூ ஷணம் அவர்
வண்ணஞ் சிறந்திடும் கவிதை கதைகளும்
பண்ணித் தருமவர் புகழுக் குரியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. பாடலில் ஸலவாத் பாடியே நின்றவர்
ஏடுகள் எழுதியே மாலைகள் சூடினார்
தேடரும் விருதாம் கலாபூ ஷணத்தையும்
ஈட்டிய செய்யித் முஹம்மத் ஹாஜியார்

34. ஏடறி யாத இலக்கியக் களஞ்சியப்
பாடல்கள் பாடிய யூசுப் புலவர்
ஈட்டினார் விருதாம் கலாபூ ஷணத்தை
சூடினார் புலவர் எனும்திருப் பெயரை

35. பாவலர் பதியத் தளாவை பாறூக்
பாவமு தங்கள் பண்ணித் தருபவர்
மேவிடும் விருதாம் கலாபூ ஷணத்தை
மேவியே பெற்றவர் மேன்மையே யுற்றவர்

36. காத்தான் குடியதன் வரலாற்று நூலினைக்
கோத்து வழங்கிய குழுவின் தலைமகன்
வாழ்த்துக் குரியவர் ஜவாத்ஸேர் பொதுப்பணி
போற்றுஞ் சிறப்புடன் புரிந்திடும் புண்ணியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. ஸேருடன் சேர்ந்தந்த வரலாற்று நூலினை
சீராய் எழுதிய அதிபர் சுபைருடன்
சேர்ந்தே தொகுத்தவர் புஹாரீ மௌலவி
சீராய் வழங்கிய குழுவினர் வாழ்கவே!

38. காத்தான் குடியின் வரலாற் றாய்வினைக்
காத்திர மாகச் செய்தவர். மன்றம்
பூத்திடச் செய்த மஹ்றூப் கரீமும்
காத்தான் குடியின் கலைமகன் ஆவார்

39. வரலாற்றுத் தகவலைத் தொகுத்து வழங்கியே
சிறப்புடன் காத்தான் குடியதன் சரித்திரம்
வரைந்திடும் ஆதம் லெப்பையின் சேவையும்
குறிப்பிடத் தக்கவோர் இலக்கியப் பணியதாம்

40. ஓங்கும் புகழுடன் ஊருக் குழைத்தவர்
பாங்காய் இலக்கியப் பணிகளும் செய்தவர்
நீங்காப் பெருமைசேர் அஹமது லெப்பையாம்
ஓங்கும் தலைவரின் நாமம் வாழ்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. பெண்களிற் பிரபலம் பெற்றவர் நஸீலா
பண்ணினார் சிறப்புடன் சிறுகதை பற்பல
உன்னியே சிறுகதைப் போட்டிகள் தம்மிலே
கண்ணியப் பரிசுகள் கனதியாய்ப் பெற்றவர்

42. நாட்டார் இலக்கியப் பாட்டை நயப்பவர்
போற்றும் கல்வியிற் பணிகள் புரிந்தவர்
ஏற்றஞ் சிறந்த நம் எஸ்.எம்.பீ. முகிதீனும்
ஆற்றல் மிகைத்தவர் அன்னார் வாழ்கவே!

43. மார்க்கக் கல்வியைக் கற்றவோர் மௌலவி
ஈர்க்கும் கவிஞராம் இப்றாஹீம் நத்வியும்
பாக்கள் புனைபவர் பாடல் இயற்றுவார்
ஆக்கத் திறன்மிகு அன்னார் வாழ்கவே!

44. கல்விப் பணியிலே கால்பதித் திருந்தவர்
கல்வித் துறையுடன் அரசியல் துறையிலும்
பல்வகைப் பணிகள் செய்தவர் முதல்வராய்ப்
பல்வளம் பெற்றவர் முபீனெனும் கலைஞரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. இலக்கியக் கழகம் பற்பல இருந்தன
இலக்கிய விழாக்கள் எங்கும் நடந்தன
இலக்கியத் தாகம் இதயந் தாங்கியோர்
விளங்கிடு கின்றார் துலங்கிடு கின்றார்

46. ஆர்.ஆர்.ஸீ. யெனும் அரும்பணி மன்றம்
சீரா யிலக்கியப் பணியும் செய்தது
பேர்புகழ் பெற்ற பெரியார் பற்பலர்
சேர்ந்தே யிதனைச் சிறப்பாய் வளர்த்தனர்.

47. பெருங்கவி இக்பால் பெயரைத் தாங்கிய
அருஞ்சன சமூக மன்றமும் ஈங்கு
சிறப்புடன் இலக்கியச் சேவை செய்தது
திறமையோர் இதனைத் திறம்பட வளர்த்தனர்

48. பாவலர் சேர்ந்து படைத்தவோர் பண்ணை
பாவலர் பண்ணை இலக்கியப் பண்ணை
சேவைகள் செய்து செழித்திடும் பண்ணை
பாவலர் நாவலர் கலைஞரை ஊக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. பிரதேச செயலக கலாசாரப் பேரவை
பிரதேச இலக்கிய விழாக்கள் நடத்தும்
பிரதேச செயலகர் தலைமையில் கூடியே
பிரதேச இலக்கியப் பிரமுகர் நடத்துவர்

50. கலாசார மண்டபம் காத்திடும் நிறுவனம்
கலாசார மத்திய நிலையமும் சிறப்புடன்
கலைகள் வளர்த்திடும் கலைஞரை வாழ்த்திடும்
கலைஞர் உருப்பெறக் காலாய்த் திகழ்ந்திடும்.

51. அச்சுத் தாள்பல அணியாய்த் தோன்றின
மெச்சும் புகழ்மிகு நூல்கள் மலர்ந்தன
மிச்சம் கையெழுத் திதழ்கள் மிளிர்ந்தன
உச்சப் புகழுடன் ஓங்கி உயர்ந்தன

52. "ஒளி"யெனும் பெயரில் ஒளிர்ந்தது ஓரிதழ்
தெளிதமிழ் மொழியில் "தேனோடை" யிதழ்
இலக்கிய மன்றப் "பொற்கிழி" பூத்தது
அழகு கொழித்தது "அவதானி" யிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. "பொற்கிழி" யென்பது இலக்கிய மன்றப்
பொற்படைப் பாகும் போற்றினர் பல்லோர்
பற்பல கலைஞர் பாரில் சிறக்கப்
"பொற்கிழி"யதுவே புதுக்கள மானது

54. "வார உரைகல்" மலர்ந்தது ஈங்கு
வாரம் ஒருமுறை வலமே வந்தது
வாரந் தோறும் சுடச் சுடச் செய்திகள்
வாரித் தந்தது இலக்கியம் வளர்த்தது

55. இன்னும் பல்லிதழ் இலங்கின ஈங்கு
என்றும் இலக்கியம் இனிதே வளர்த்தன
அந்நாள் அவற்றில் ஆக்கம் படைத்தோர்
இந்நாள் புகழின் ஏணியில் நிற்கிறார்

56. ஊடகத் துறையிலே உன்னதம் பெற்றவர்
ஏடுகள் தம்மிலே செய்திகள் எழுதுவோர்
நாடியே நம்மகச் செய்திகள் பரப்பினர்
தேடரும் புகழினைத் தேடியே தந்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. நாளிதழ் தோறுமே நாடியே செய்திகள்
நாளுமே வழங்கிடும் பழ்லுல்லா தம்முடன்
சால்புறு ஜஃபர்கான், மௌலவி முஸ்தபா
வாழ்த்திடும் நூறுதீன் வாழுமிவ் வூரதாம்

58. தொலைக்காட்சி சேவையில் தொடர்ந்து பணி செயும்
கலைஞராம் ஜாபிரும் கலைப்பணி செய்பவர்
இலைமறை காயென இருந்திடுங் கலைஞரை
தொலைக்காட்சி மூலமே துலங்கிடச் செய்பவர்.

59. வாரத் தொருமுறை தோன்றிடும் "விடிவெள்ளி"
சீராய்ச் செழித்திடச் செய்திட்ட இர்ஹாமும்
சேர்ந்தே பணிசெயும் நம்மகன் பைறூஸும்
தேர்ந்த ஊடகச் செல்வராய்த் திகழ்கிறார்.

60. உள்ளூர் வானொலி "றிஸாலா" தோன்றியே
வெல்லும் கலைஞரைத் தூக்கி விட்டது
உள்ளங் கவர்ந்திடும் "றிஸாலா" நிகழ்ச்சிகள்
அள்ளித் தருபவர் அநேகர் இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. றிஸாலாப் பணிப்பாளர் கபீர் எம். ஹஸனவர்
விசாலப் பணியினால் விளங்கும் புகழினர்
றிஸாலாக் குடும்பத்தார் ரசிக்கும் கலைஞராம்
றிஸாலா வளர்த்தநற் கலைஞர் வாழ்கவே!

62. செரண்டீப் முஸ்தபா, எம்.ஐ.எம். முஸ்தபா
இரண்டு பேர்களும் றிஸாலாக் களத்தினர்
செரண்டீப் முஸ்தபா குறும்பா படிப்பவர்
சிறந்த கலைஞராம் எம்.ஐ.எம். முஸ்தபா

63. அறிவிப் பாளராய் அணிசேர் கலைஞராய்
சிறந்து விளங்கிடும் ஜுனைதீன் மாஸ்டரும்
நிறைவாய் இலக்கியப் பணிகள் செய்பவர்
சிறக்கும் றிஸாலா வானொலிக் கலைஞராம்

64. அறபுக் கவிஞர்கள் வாழ்ந்து சிறந்தனர்
அறபு மொழித்திறன் பெற்றுச் செழித்தனர்
சிறக்கும் நூல் பல செம்மை அறபியில்
சிறப்பாய்த் தந்தனர் சேவை செய்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. அறபுக் கவிஞராம் அப்துல் கபூர் ஆலிம்
அறபுத் தாள்களில் ஆக்கம் படைத்தவர்
அறபுக் கவிதைகள் இன்று புனைகிறார்
சிறக்கும் புதல்வராம் மௌலவி அமீனவர்

66. மூத்த புலவர்கள் மார்க்க அறிஞராம்
கீர்த்தி மிக்கவர் மார்க்கத் தத்துவம்
மூத்த தமிழிலே கோத்துத் தந்தனர்
யாத்த நூலெலாம் போற்றும் பொக்கிஷம்

67. சிந்தை மகிழ்ந்திட சீறா படிப்பவர்
பந்தி சபைகளில் பதங்கள் படிப்பவர்
உந்தும் திறனுடன் கவிகள் இசைப்பவர்
விந்தைச் சிறப்புடன் விளங்கும் ஊரிது

68. களிக்கும் காவியம் கனபேர் புனைந்தனர்
அழிவைக் கூட்டிய வெள்ளக் காவியம்
வளியின் கோரத்தை விளக்கும் காவியம்
உளத்தில் நிலைத்த பல் நிகழ்வுக் காதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. இனிய தமிழிலே இயற்றிப் படித்தனர்
புனிதத் தினங்களில் படிக்கும் பாடலும்
மனதைத் தொட்டிடும் மார்க்க விளக்கமும்
இனிதாய்ப் புலவர்கள் கவியிற் படைத்தனர்

70. இன்று கலைஞர்கள் இங்கு நிறைந்துளார்
என்றும் இதழ்களில் எழுதிக் குவிக்கிறார்
நின்று நிலைக்கின்ற ஆய்வும் செய்கிறார்
குன்றாப் புகழினிற் கொழிக்கின் றார்களே.

71. இலக்கியப் பணியினை ஐம்பது ஆண்டுகள்
துலக்கமாய்ச் செய்த நம் இலக்கிய மன்றமோ
இலக்கிய வானிலே இலங்கிடும் தாரகை
இலக்கியப் பணியிலே இமயமே யானது

72. இலக்கிய உணர்வினர் எல்லோருஞ் சேரலாம்
இலக்கியப் பணியினில் எம்மோ டிணையலாம்
இலக்கிய மன்றத்தின் உறுப்பின ராகி
இலக்கிய வானில் இலங்கித் திகழலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. இலக்கிய மன்றம் எத்தனை இருப்பினும்
இலங்கிடும் நவ இலக்கிய மன்றமே
விளங்கிடும் தாயெனும் வரலாற் றுடையது
இலங்கை யெங்கும் இலங்கிச் செழிப்பது

74. இலக்கிய மென்பது இதயந் தொடுவது
இலக்கிய வாதிகள் இலட்சிய வாதிகள்
இலக்கிய மூலமே இதயம் இணைந்திடும்
இலக்கிய மூலமே சமயம் வளர்க்கலாம்

75. இலக்கிய வாதிகள் இணைந்திட வேண்டுமே!
இலக்கிய வாதிகள் பிணங்கிட லாகுமா?
இலக்கிய வாதிகள் யாவரும் இணைந்திடில்
இலக்கியம் வளர்த்திடல் இலகுதா னல்லவா?

76. இன்தமிழ் பேசிடும் தமிழரும் முஸ்லிமும்
அன்புடன் பழகிட வழிசெயும் மொழி தமிழ்
அன்பராய் நாமெலாம் அகத்தினாற் பிணையுவோம்!
பண்புடன் தமிழினிற் பணிபல செய்குவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. சரிவரத் தமிழினைப் பேசுதல் எழுதுதல்
சரிந்திடும் நிலையினைக் காண்கிறோம் இன்றுநாம்
திருத்தமாய்த் தமிழினிற் பேசவும் எழுதவும்
கருத்தொரு மித்துநாம் கடமையே செய்குவோம்!

78. மாணவ மணிகளும் தமிழினிற் தேர்ச்சியே
காணுதற் கானநற் கடமைகள் செய்குவோம்!
மாணவர் மத்தியில் இலக்கிய உணர்வினைத்
தூண்டிடும் பணிகளைத் தொடர்ச்சியாய்ச் செய்குவோம்!

79. இலக்கியப் போட்டிகள் எங்கணும் நடத்துவோம்
இலக்கிய விழாக்களை ஏற்பாடு செய்குவோம்
இலக்கிய நூற்களை வெளியிட் டுதவுவோம்
இலக்கியப் பணியதே இலட்சிய மென்னுவோம்!

80. காத்தான் குடியது கலைகளின் பிறப்பிடம்
பூத்துப் பொலிகிறார் பொன்னார் கலைஞரே
காத்தல் அவர்தமைக் கடமை யல்லவா?
காத்தால் நம்பதி செழிக்கும் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. சஞ்சிகை தன்னிலும் பத்திரி கையிலும்
விஞ்சிடும் படைப்புகள் தருபவர் நற்புகழ்
மிஞ்சிடும் நம்திருக் காத்தான் குடியினர்
செஞ்சொற் கவிஞரும் கதைஞரு மாயினர்

82. தேசிய ரீதியில் சர்வதே சத்திலும்
வீசிடும் புகழுடன் விளங்குறார் நம்மவர்
வாசமாய் அன்னவர் வழங்கிடும் இலக்கியம்
வாசமே கமழ்ந்திடும் வையக மீதிலே

83. புலவர் மணியெனும் ஷரீபுதீன் ஹாஜியார்
புலவரின் நினைவுடன் சர்வதே சத்திலும்
நலமுடன் நடந்தவோர் கவிதைப் போட்டியில்
விளங்கு நம்மூரவர் வென்றனர் பரிசினை

84. இரண்டாம் பரிசினை மௌலவி புஹாரியும்
சிறப்புப் பரிசினை மருத மைந்தனும்
சிறப்பாய்ப் பெற்று நம் மூரின் புகழினைப்
பரப்பி நின்றனர் பாரில் செழித்தனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85. அகில மொழியதாம் அறபு மொழியிலும்
புகழும் மொழியதாம் பூக்குந் தமிழிலும்
திகழும் நூல் பல தந்தார் நம்மவர்
புகழாற் பூமியிற் பொலிந்தா ரன்னவர்

86. வெல்லுந் தமிழினிற் பாடல் இசைப்பவர்
வில்லுப் பாட்டிலே கதைகள் தருபவர்
சொல்லுப் போட்டியில் சூர ரானவர்
எல்லாம் இருக்கிறார் எங்கள் ஊரிலே

87. நாட்டார் பாடலும் நன்றாய்ப் பாடுவார்
கூட்டாய்ப் பொல்லடி கூடிச் சுழற்றுவார்
காட்டும் சீனடி சிலம்படி செய்குவார்
மூட்டும் தீயினாற் பந்தமும் ஆடுவார்

88. காத்தான் குடியது தீனைக் காத்ததாம்
காத்தான் குடியது தமிழைக் காத்ததாம்
காத்தான் குடியது கனிவாய் இலக்கியம்
காத்த குடியதாம் பூத்த குடியதாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. காத்தான் குடியது கனிவாய் மக்களைக்
காத்த குடியதாம் கருணை யிறையருள்
பூத்த குடியதாம் புனித மறைமனம்
காத்த ஹாபிழ்கள் வாழும் பதியதாம்

90. மார்க்க அறிவினால் மாண்பு பெற்றவர்
கீர்த்தி யாகவே வாழும் ஊரதாம்
ஊர்கள் யாவுமே உவந்து போற்றிடும்
சீரும் செழுமையும் சேர்ந்த நகரமாம்

91. பொருளில் மிக்கவர் புனிதப் பணிக்கெலாம்
பொருளை ஈந்துதான் போற்றும் நகரமாம்
வருந்து வோர்க்கெலாம் வழங்கித் துணைசெயும்
அருமைப் பண்பினர் அமையும் நகரமாம்

92. பள்ளி வாயலும் நிறுவ னங்களும்
நல்ல பணிக் கெனச் சேர்ந்து செயற்படும்
வல்ல மைமிகு சம்மே ளனத்தையும்
உள்ள டக்கிய உயர்ந்த ஊரதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. உலமா சபையெனும் உயர்ந்த நிறுவனம்
நலமாய்ச் செயற்படும் நமது நகரமாம்
பலமாய்ப் பற்பல சங்கம், நிறுவனம்
வளமார் பணி செயும் வல்ல பதியதாம்

94. பள்ளி வாயல்கள் பாட சாலைகள்
வல்ல "தீன்" கலை வழங்கும் மத்றஸா
உள்ள ஊரதாம் ஓங்கும் பேருடன்
நல்ல புகழ்மிகு நகர மானதாம்

95. சங்கை மிக்க நம் "ஷைகுல் பலாஹி"னை
சங்கைப் படுத்திடும் சாந்தி நகரமாம்
எங்கும் தீன் மணம்! பொங்கும் நல்லருள்!
எங்கள் நற்பதி காத்தான் குடியதாம்

96. தீய வன்செயல் தீய்க்கும் போதிலே
தூய பள்ளியில் தொழுத தீனவர்
பாய்ந்த குண்டினால் மாய்ந்து போயினர்
தோய்ந்த குருதியே பாய்ந்த ஊரிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. “கஹ்தான்” அறபிகள் குடியி ருந்ததால்
காத்தான் குடியென நாமம் பெற்றதாம்
“கஹ்தான்” அறபிகள் தொடர்பு பெற்றதால்
காத்தான் குடியது கனிவு கண்டதாம்

98. தமிழும் அறபதும் சேர்ந்து செழிப்பதால்
அமுத இலக்கியம் அழகு பெற்றதாம்
எமது இலக்கிய மன்றம் எழுந்ததால்
எமது ஊரது எழுச்சி பெற்றதாம்

99. ஆண்டு ஐம்பதைத் தாண்டி வாழ்ந்திடும்
நீண்ட புகழ்மிகு மன்றம் ஈதுவாம்
நீண்ட காலமே நின்று நிலைத்திட
வேண்டு மென்பதே எங்கள் வேணவா

100. என்னை ஊக்கிய மன்றம் இதனையே
கண்ணைப் போலவே காக்கும் ஒருவனாய்
என்றும் இருக்கிறேன் நன்றி செய்கிறேன்
என்றும் இலக்கிய மன்றம் வாழ்கவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மௌலவி எம்.எச்.எம்.புஹாரி (பலாஹீ) நாடறிந்த கவிஞர். கலாபூஷண விருது உட்பட பல விருதுகளை வென்றவர். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் "வரலாற்றில் ஓர் ஏடு" நிகழ்ச்சியை வழங்குபவர். புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரீபுத்தீன் நூற்றாண்டு நினைவாக அண்மையில் நடத்தப்பட்ட சர்வதேச மரபுக் கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றவர்.

புகழாரம், மூத்தாரம், முழுமதி, நபி மொழி நாற்பது, செழிக்குஞ் செல்வம், சாந்தி மார்க்கத் தீர்ப்புகள், வரலாற்றில் ஓர் ஏடு, தேன் துளிகள், நன்னெறி கூறும் நபி மொழி நூறு போன்ற பல நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்.

ஸஹீஹுல் புஹாரீயிலுள்ள 500 ஹதீஸ்களைத் தமிழிற் கவிதையாக்கி "புஹாரீயின் பொன் மலர்கள்" என்னும் நூலை விரைவில் வெளியிடவுள்ளார்.

இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளையும் இவர் சமர்ப்பித்திருக்கிறார்.

ஓய்வு பெற்ற மௌலவி ஆசிரியரான இவர், தற்போது நிந்தவூர் காஷிபுல் உலூம் அறபுக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.

**வெளியீடு**
**நவ இலக்கிய மன்றம் - காத்தான்குடி**

Digitized by Noolaham Foundation.